நாம் தொடர முடியும். பொதுவாக கல்லூரிகள், அதுவும் கலைக் கல்லூரிகளை ஆரம்பிப்பதைவிட தொழில் கல்லூரிகள் அல்லது பாலிடெக்னிக்குகள் போன்றவற்றை ஆரம்பிப்பது என்பது படிக்கின்றவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்று நம்புகின்ற காரணத்தால், நாம் ஓரளவு தொழில் கல்லூரிகளிலே கவனம் செலுத்தி வருகின்றோம். எதிர் காலத்தில் இப்படிப்பட்ட தொழில் கல்வி நியாயம் என்று படுமேயானால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும்.

சாமாளாபுரம் பேரூராட்சிப் பள்ளிகள்.

*** 66. வினா**—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்லடம் ஊராட்சி ஒன்றியம், சாமாளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட துவக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு 1—9—1980 முதல் இன்றுவரை மானியம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) மதிய உணவுச் செயலர்கள் பணம் இல்லாத காரணத்தினால் மதிய உணவு வழங்குவதை 1—4—1982 முதல் நிறுத்திவிட்டதாகக் கூறப்படுவதும் உண்மையா ?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** (அ), (இ) மற்றும் (உ) பல்லடம் ஊராட்சி ஒன்றியம் சாமாளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பள்ளிகளுக்குச் சேர வேண்டிய மதிய உணவு பங்குத் தொகை (அதாவது பழைய மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உள்ளாட்சி மன்றங்கள் ஒரு குழந்தைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு கொடுக்க வேண்டியிருந்த பங்குத் தொகை) 1—10—1980 முதல் உள்ள காலத்திற்கு உரிய நேரத்தில் கொடுக்கப்படாததால் அப்பள்ளிகளில் 1—4—1982 முதல் 30—6—1982 முடிய மதிய உணவு வழங்கப்படவில்லை. இப்பொழுது 1—7—1982 முதல் அப்பள்ளிகளிலும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.